தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal

eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 6 Special Issue: 02 December 2025
DOI: https://doi.org/10.63300/tm060225

# The Kali Kambu Dance of the Muslim Community: A Research Perspective

**Dr. (Mrs.) Thakshayini Paramadevan***
Senior Lecturer - Gr - I, Swami Vipulananda Institute of Aesthetic Studies,
Eastern University, Srilanka.
Email: thakshayinip@esn.ac.lk

**Abstract**

Various communities in India possess uniqueness through their religion, traditions, and cultural forms. Among them, the "Kali Kambu Dance" found in the Muslim community stands as a notable traditional art form. It is a folk dance that expresses religious faith, spiritual emotion, and social unity.

The Kali Kambu Dance originated from the religious worship traditions of the Muslim community and is a traditional art form performed during commemorative events related to Pirs (Saints) and Valis (Holy Men). In this dance, the performers revolve in a circle, rhythmically dancing with sticks to the beat. Musical instruments such as the Thavil, Thappu, and Uththareena Nadaswaram are used. The songs mainly consist of religious praises and verses exalting the greatness of the Valis.

This dance works to foster unity, spiritual ecstasy, and faith within the community. Furthermore, it instills qualities such as discipline, cooperation, and religious respect among the youth. The Kali Kambu Dance serves as a cultural identity integrating people's life, tradition, and religion.

Although this dance is currently diminishing in some areas, it still thrives in religious festivals within certain Muslim communities. Even though its form has undergone changes due to the influence of modern music, lighting, and costumes, its original spiritual essence remains unchanged. From a researcher's perspective, the Kali Kambu Dance is an important field of study spanning the domains of folk tradition, religious art, and cultural expression.

**Keywords:** *Muslim Community, Kali Kambu Dance, Folk Art, Tradition, Spirituality, Cultural Religious Festival.*

**References:**

1. Anas, M.S.M. Muslim Fine Arts in Sri Lanka: A Critical Study (**இலங்கையில் முஸ்லிம் நுண்கலை: ஒரு விமர்சன ஆய்வு**). Kumaran Puthaka Illam, 2007.
2. Ajmalkhan, P.M., and M.M. Uvais. History of Islamic Tamil Literature, Volume Four (**இஸ்லாமியத் தமிழ் இலக்கியவரலாறு தொகுதி நான்கு**). Madurai Kamaraj University, 1997.
3. Sharif Ramseen, M. Islamic Arts (**இஸ்லாமியக் கலைகள்**). Madar Umma Veliyeedu, 1999.
4. Abdul Hameed, M.A., editor. Majmu'a Munajat (**மஜ்முஅ முனாஜாத்**). Haji M.A. Abdul Hameed & Sons, 1988.
5. Jameel, S.H.M., editor. Muslims of Ampara District (**அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்**). Ministry of Cultural and Religious Affairs, Department of Muslim Religious and Cultural Affairs, 1997.
6. Rasul, H.G. "'Pakkirshaakkal' Ennum Kathai (The Story Named 'Pakkirshaakkal')." malaigal.Com, Vol. 02, 2016, malaigal.Com//p-8338.

Macdonald, Millton Cowan, J., editor. A Dictionary of Modern Written Arabic. Evans Ltd., 1980.**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# முஸ்லீம் சமூகத்தின் களிகம்பு நடனம் ஓர் ஆய்வு நோக்கு

***கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

சிரேஷ்ட விரிவுரையாளர், நடன நாடகத்துறை, சுவாமி விபுலாநந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இந்தியாவின் பல்வேறு சமூகங்கள் தங்களது மதமும் மரபும் கலாச்சார வடிவங்களின் மூலம் தனித்துவத்தைக் கொண்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு பாரம்பரிய கலை வடிவமாக முஸ்லிம் சமூகத்தில் காணப்படும் “களிகம்பு நடனம்” அமைகிறது. இது மத நம்பிக்கை, ஆன்மீக உணர்வு மற்றும் சமூக ஒற்றுமையின் வெளிப்பாடாக விளங்கும் மக்கள் நடனமாகும்.

களிகம்பு நடனம் முஸ்லிம் சமூகத்தின் மத வழிபாட்டு மரபுகளில் தோன்றி, பீர்கள் மற்றும் வலிகள் தொடர்பான நினைவு நிகழ்வுகளின் போது ஆடப்படும் பாரம்பரிய கலை வடிவமாகும். இந் நடனத்தில் ஆடுபவர்கள் வட்ட வடிவில் சுழன்று கம்புகளுடன் தாள ஒத்திசைவாக ஆடுவர். தவில், தப்பு, உத்தரீன நாதஸ்வரம் போன்ற வாத்தியங்கள் இசைக் கருவிகளாகப் பயன்படுகின்றன. பாடல்கள் பெரும்பாலும் மதப் புகழ் பாடல்கள் மற்றும் வலிகளின் பெருமையைப் புகழும் வரிகள் அடங்கியவையாக இருக்கும இந்நடனம் சமூகத்தில் ஒற்றுமை, ஆன்மிக பரவசம், நம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கும் பணியாற்றுகிறது. மேலும், இது இளைஞர்களிடையே ஒழுங்கு, ஒத்துழைப்பு, மத மரியாதை போன்ற பண்புகளை உருவாக்குகின்றது. களிகம்பு நடனம் மக்கள் வாழ்க்கை, மரபு மற்றும் மதம் இணைந்த கலாச்சார அடையாளமாக விளங்குகிறது.

தற்காலத்தில் இந்த நடனம் சில பகுதிகளில் குறைந்து காணப்படினும், சில முஸ்லிம் சமூகங்களில் இது இன்னும் மதவிழாக்களில் உயிருடன் நிலைத்து நிற்கிறது. நவீன இசை, ஒளி, ஆடை ஆகியவற்றின் தாக்கத்தால் இதன் வடிவம் மாற்றம் அடைந்தாலும், அதன் மூல ஆன்மீக சாரம் மாறாமல் தொடர்கிறது. ஆய்வாளர் நோக்கில் களிகம்பு நடனம் மக்கள் மரபு, மத கலை, கலாச்சார வெளிப்பாடு ஆகிய தளங்களில் முக்கிய ஆய்வுத் துறையாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:**

முஸ்லிம் சமூகம் , களிகம்பு நடனம் , மக்கள் கலை , பாரம்பரியம் , ஆன்மிகம் , கலாச்சார மத விழா

**முன்னுரை**

கலையானது மனிதனுடைய கற்பனைகளின் ஒட்டு மொத்த திரட்சியாகவும் அவனுடைய மனதின் உணர்வு எழுச்சிகளாகவும் வெளியேற்றப்படுகின்றது. இது பண்பாட்டு ரீதியாக மனிதனை வளப்படுத்துபவை. ஒவ்வொரு சமூத்தினுடைய கலை வெளிப்பாடுகளும் அந்த சமூகத்தின் கலை, கலாசார, பண்பாட்டு, பழக்கவழக்கங்கள் வெளிப்படுத்தப் படுகின்றது. கலைக்கு ஜாதி, மதம், பேதம் என எல்லாவற்றையும் தாண்டி கலையை கலையால் இரசிக்கும் உணர்ச்சி எதுவோ அதுவே அதனால் கலை என்பது இதுதான் என்று ஒரு வட்டம் போட்டு அதனுள் அடக்கிவிட முடியாது. பரிணாம வளர்ச்சியினால் புது புது சிந்தனைகள் வருவது போல கலையும் மாறிக் கொண்டிருக்கும்.

அந்தவகையில் இஸ்லாமிய சமூகம் தனது தேவைக்கு ஏற்ற வகையில் அவர்களது அழகியற் கலைகளைத் தழுவிக் கொண்டது. முஸ்லிம்களது கலை முஸ்லிம்களது வாழ்வின் ஓர் அம்சம். கூருணர்வு படைத்த அவர்களின் உள்ளங்களது ஆத்மீகத் தேட்டத்தின் வெளிப்பாடு அது. கூருணர்வுடைய அவர்களது உள்ளங்கள் அவர்களது சொந்தக் கலாசாரத்தில் வேரூன்றி இருந்தன. அவர்களுக்கேயுரிய வெளிப்பாட்டு முறையை, ஆர்வங்களை, விருப்பங்களை மனப்போராட்டங்களை அடிப்படையாகக்

கொண்டு அவை கிளர்ந்தெழுந்தன. இந்த இயக்க ஆற்றலில் இருந்தே கலை வெளிப்பாடுகளின் தனித்தன்மையான மரபுகளும் பாங்குகளும் தோற்றம் பெறலாயின. இந்த மரபுகளும் பாங்குகளுமே முஸ்லிம்களது கலை என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன.

கலை, கலாசாரம் ஒரு சமூகத்தை பிரதிபலிக்கின்ற முத்திரைகளாகும். பாரம்பரிய கலாசார வடிவங்களைக் கொண்டு ஒரு சமூகத்தின் வரலாற்றைச் சொல்லும் அடிநாதமாக விளங்கும். கலாசார வடிவங்களை அறிவியல் ரீதியாக ஆராயும் போது அதற்குள்ளிருந்து ஆழ்ந்த அகன்ற அடிப்படைக் கருவூலங்கள் வெளிவரும். ஒவ்வொரு சமூகத்திற்கும் கலாசார வடிவங்கள் உண்டு. இந்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் கலாசார கலை இலக்கிய பாரம்பரிய வடிவங்களில் கோலாட்டம் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

களிகம்பு என்றே களிகம்பாட்டத்தினை முஸ்லிம்கள் கம்படி பொல்லடி, களிகம்பு, சுளிக்கம்பு என்று பலவறாக ஊருக்குத் தக்கவாறு அழைப்பர். ஆனாலும் இலங்கையில் அதிகமான ஊர்களில் இது பேசப்பட்டு வருகின்றது. இக் களிகம்புக் கலை புராணக் கதைகளையும், சரித்திரக் கதைகளையும் கொண்டு வருவதனைக் காணலாம்.கும்மி, களிகம்பு போன்ற கலைகள் நாட்டார் இலக்கிய வடிவங்களை சார்ந்ததாகும். இதற்கு சாஸ்திரிய முறை என்று சரியாக இல்லாததால் இதன் ஆட்ட வணங்களை இதன் அண்ணாவிமார்களே தன் எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைத்துக் கொள்கின்றனர் எனலாம்.

இக் களிகம்பு ஆட்டமானது கிழக்கு மாகாணம், தென் மாகாணம், மன்னார் மாவட்டம். புத்தளம் மாவட்டம் போன்ற இடங்களில் மிகவும் அதிகமாக ஆடப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதிலும் இன்று கிழக்கு மாகாணப் பகுதியலே இறக்காமம், அக்கரைப்பற்று பிரதேசத்தின் தக்கா நகர், புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களிலும் அதிகளவில ஆடப்படுவதைக் காணலாம் இவ்வாறான ஆட்டம் முஸ்லிம்களைப் அபாறுத்த வரை முழு நிறைவானதும், பொழுதுபோக்கு உட்பட வாழ்வில் மகிழ்வுக்குரிய, கவனத்திற்குரிய எல்லா நிகழ்வுகளிலும் தவறாது இடம்பெற்ற கலையாக அது அவர்களது சமூக வாழ்வில் சங்கமித்திருக்கிறது.

**களிகம்பின் வரலாற்றுப் பின்னணி**

களிகம்பு என்பது கிராமத்து மக்களினால் ஆடப்படும் ஒரு வகை ஆடல் முறையாகும். இவ்வாடல் முறையானது இற்றைக்கு பல நூற்றாண்டு காலங்களுக்கு முன் ஹைப்பர் கணவாய் வழியாக வந்த அராபியர்கள் வியாபார நோக்கத்திற்காக கேந்திர நிலையமாக விளங்கிய இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்கள் கொண்டு வந்த கலை வடிவங்களாக வாள்வீச்சு. கம்பு விளையாட்டு, அம்பு எய்தல் போன்றவற்றைக் கூறலாம். இவர்கள் தமது வியாபார நோக்கத்திற்காக மலையடிவாரத்தில் தமது குடியிருப்புக்கனை அமைத்தனர்.

இவ்வாறு வாழ்ந்தவர்கள் காட்டுப் பகுதிக்கும் பொழுது போக்கிற்காக வாள் வீச்சு கம்பு விளையாட்டு, அம்பு எய்தல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டு வந்தனர். பின்னர் வந்தவர்கள் தான் இதனை சில மாற்றங்களை ஏற்படுத்தி வளர்த்து வந்தனர். இருநடனத்தாலும் இவற்றில் வாள் வீச்சு, அம்பு எய்தல் போன்றன வழக்கொழிந்து போயின. ஆனால் கம்பு விளையாட்டினை பொல்லடி என மாற்றம் செய்து பல பாடல்களை அதாவது புராண சரித்திரக் கதைகளைக் கொண்டும் அவர்களது. வாழ்வியலில் வரும் சம்பவங்களைப் பாடலாகக் கொண்டும் இப் பொல்லடியை வளர்த்துச் சென்றனர்.

இலங்கை முஸ்லிம்களின் கோலாட்ட வகையினை “களிகம்பு” சொற்பிரயோகம் கேரளத்துடனும் தமிழ் நாட்டுடனும் தொடர்புடையது. புத்தளம், மன்னார். கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரதேசங்களில் இச் சொற்பிரயோகம் பயன்பாட்டில் உள்ளது. மலையாளத்தில் கோல் கம்பையும் “களி” ஆட்டத்தையும் குறிக்கின்றன. கேரள மாப்பினை முஸ்லிம்களின் முக்கியமான ஆட்டமாக “கோல்களி” விளங்குகின்றது. தமிழ் நாட்டில் வைத்தானையும் சுளியலும் ஆண்கள் பங்கு கொள்ளும் ஆட்டங்களாகும் தமிழ் நாட்டுக்

களியலும் கேரள நாட்டுக் கோல்களியும் இலங்கையில் முஸ்லிம்களின் களிகம்பாட்டத்தில் செல்வாக்குச் செலுத்துவதாக கருதமுடியும் எனவும் குறிப்பிடுகிறது.

இக் களிகம்பாட்டமானது தமது இல்லாத மக்களினால் அன்று தொட்டு ஆடப்பட்டு வந்திருக்கின்றது. பகல் வேளைகளிலும் சோர்வுடன் வேலை செய்து விட்டு இரவு வேளைகளில் தமது அலுப்புப் போகும் படியாக பலர் ஒன்றிணைந்து இந்த ஆட்டத்தினை ஆடியுள்ளனர். இவர்கள் இரவு வேளைகளில் தான் நிலவு வெளிச்சத்தில் தமது மனம் மகிழும் வகையில் பல பாடல்களைப் பாடி ஆடுவர். நம்மை சுற்றிப் பார்க்கும் பார்வையாளர்களும் இன்புறும் வகையில் தொடர்ந்து ஆடுவர். இவர்கள் ஆடும்போது வேறு சிலர் காத்துக்கொண்டிருப்பர். ஏனெனில் ஆடுபவர்கள் களைத்தால் அவர்களை இளைப்பாறச் சொல்லி விட்டு தாமும் போய் அந்த ஆட்டத்துடன் இணைந்து கொள்வார். எனவும் கூறுகின்றனர். மேலும் இப் பொல்லடியை திருமண வீடுகளிலும் விசேட தினங்களிலும் ஒரு தொழிலுக்காக ஆடும்.

**களிகம்பு நடன இசை**

ஒரு நடனத்திற்கோ அல்லது நாடகத்திற்கோ இசை முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ் இசை கர்நாடக இசை, நாட்டார் இசை வகைப்படுத்தப்படுகின்றது. கட்டுப்பாடுகள், வரையறைகளைக் கொண்டது கர்நாடக இசை என்றும் கிராமப்புற மக்களின் நாட்டுப்புற பாடல்கள் நாட்டார் இசை என்றும் கூறப்படுகின்றது.

இலங்கை முஸ்லிம்கள் தங்கள் இசையை எதிலும் சேர்த்துக் கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் உள்ளனர். இஸ்லாமியக் கலைப் பண்பாட்டிலிருந்து நோக்குவதாயின் அரபு, பாரசீக, உருது, மற்றும் வடநாட்டு சாஸ்திரிய சங்கீத மரபுகள் முஸ்லிம்களின் அடிப்படையான அல்லது செந்நெறி இசைக்கு ஆதாரமாக இருந்திருக்க வேண்டும். கஸீதா. றாந்திபு, மௌலீது, சில வகை பைது என்ற சமயச்சார்பான பாக்கள்ப்பதங்கள் பாடும் மரபு பன்னெடுங்காலமாக நிலை பெற்றிருந்த போதும், செந்தெலி “அரபு இசை" மரபு இங்கு காணப்படவில்லை. வடநாட்டு சாஸ்திரிய இசையும் இங்கு முஸ்லிம் இசையாகப் பயிலப்பட வில்லை. கர்நாடக இசை தெரிந்த சில முஸலிம்கள் இருந்தார்கள் சாஸ்திரிய சங்கீதம் தெரிந்த சில முஸ்லிம்கள் இருந்தார்கள் என்பது மட்டும் ஒரு சமூகத்தின் இசை மரபு பற்றி பேசுவதற்கு போதுமானதாக இல்லை இந்த நிலையில் தான் இலங்கையில் முஸ்லிம் இசை “இஸ்லாமிய கீதம்” என்ற ஒரு மயக்கமான மெல்லிசை மரபுக்கும் தன்னை இணைத்துக் கொண்டது.

இதன் பின்னர் முஸ்லிம்களின் இசை படிப்படியாக முன்னேறியது எனலாம். இவ்வாறே தான் களிகம்பு நடனத்தின் இசையும் வளர்ச்சி பெற்றது. முஸ்லிம்களின் இசை மரபில் நாட்டார் இசை மரபுமுக்கியத்துவம் பெறுகின்றது. இம் மரபானது. தற்காலத்தில் கிழக்கு வடக்கு வடமேல், மத்திய மற்றும், தென் ஆகிய மாகாணங்களில் இதன் தொடர்பினையும் செல்வாக்கினையும் கொண்டு காணப்படுகின்றது.

அந்தவகையில் களிகம்பு நடன இசை முஸ்லிம்களின் நபியை புகழ்வதாகவும் மற்றும் மக்களின் வாழ்வியல் கோலங்களையும் அம் மக்கள் வாழும் பிரதேசத்தின் அழகு அதே நேரத்தில் முன்பு கூறப்பட்டது போல பாடலின் இராகத்தினை தீர்மானிப்பது தருவாயிருப்பதினால் நீக்கும் பாடலுக்குமிடையே பிணைப்பும் இதற்கென்று சில வரம்புகள் உண்டு பாடலின் இராகம் வேகமாக அமையும் போது ஆட்டக்காரர்களின் ஆடும் வேகமும் கோலை அடிக்கும் வேகமும் அதிகரிப்பது போல் வேகம் குறைந்த இராகத்துடன் பாடப்படும் போது வேகத்தில் மாற்றம் ஏற்படும்.

களம்பாட்டமானது அது பாடப்பட வேண்டிய சந்தத்தை ஒட்டியே அமையும். அப் பாடல்கள் ஓசை நயம் என்பவற்றினைக் கொண்டதாக காணப்படும். ஆட்டம் தொடங்குவதற்கு முன்னதாக ஒரு பிரார்த்தனை நடைபெறும். முஸ்லிங்கள் எந்த விடயத்தை ஆரம்பிப்பதாயினும் அதை ஒரு பிரார்த்தனை மூலமாகவே ஆரம்பிப்பது வழக்கம். களிகம்பு மிகவும் சிக்கல் மிகுந்த ஆட்டம் ஆதலால் ஆடும் போது ஏதும் தடைகள் ஏற்படாமல் ஆடும் போது களிகம்புக் கோல்கள் தலையையோ கைகளையோ பதம் பார்த்து விடாமல்

ஆட்டத்தின் சீர் நிலை பிழைக்காமல் இருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி இப் பிரார்த்தனை இடம் பெறும். இதன் பின் ஆட்டக்காரர்கள் அண்ணாவியாரிடமிருந்து தாம் ஆடும் கோல்களைப் பெற்றுக் கொண்டு ஆட்டத்திற்குத் தயாராக உரிய இடத்திற்கு வருவர். எந்த விதமான ஆட்டமாக இருந்தாலும் அது ஒரு விருத்தப்பாவுடனேயே ஆரம்பமாகும். விருத்தப்பாவை அண்ணாவியாரே ஆரம்பிப்பார்.

உதாரணமாக

விருத்தம் :

"ஆதி தன் அருளினாலே அஹமது நபியே
உங்கள் சுயமதில் உதவிதாரும் சேகப்பா
ஒலியுள்ளாவே ஏ...

தரு

தந்தனத் தான தனைதான தன
தான தந்தன தானானா........"

அதே நேரத்தில் முன்பு கூறப்பட்டது போல பாடலின் இராகத்தினை திரமாவிப்பது தருவாயிருப்பதினால் நீக்கும் பாடலுக்குமிடையே பிணைப்பும் இதற்கென்று சில வரம்புகள் உண்டு பாடலின் இராகம் வேகமாக அமையும் போது ஆட்டக்காரர்களின் ஆடும் வேகமும் கோலை அடிக்கும் வேகமும் அதிகரிப்பது போல் வேகம் குறைந்த இராகத்துடன் பாடப்படும் போது வேகத்தில் மாற்றம் ஏற்படும்.

கணிகம்பாட்டமானது அது பாடப்பட வேண்டிய சந்தத்தை ஒட்டியே அமையும். அப் பாடல்கள் ஓசை நயம் என்பவற்றினைக் கொண்டதாக காணப்படும். ஆட்டம் தொடங்குவதற்கு முன்னதாக ஒரு பிரார்த்தனை நடைபெறும். முஸ்லிங்கள் எந்த விடயத்தை ஆரம்பிப்பதாயினும் அதை ஒரு பிரார்த்தனை மூலமாகவே ஆரம்பிப்பது வழக்கம். களிகம்பு மிகவும் சிக்கல் மிகுந்த ஆட்டம் ஆதலால் ஆடும் போது ஏதும் தடைகள் ஏற்படாமல் ஆடும் போது களிகம்புக் கோல்கள் தலையையோ கைகளையோ பதம் பார்த்து விடாமல் ஆட்டத்தின் சீர் நிலை பிழைக்காமல் இருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி இப் பிரார்த்தனை இடம் பெறும். இதன் பின் ஆட்டக்காரர்கள் அண்ணாவியாரிடமிருந்து தாம் ஆடும் கோல்களைப் பெற்றுக் கொண்டு ஆட்டத்திற்குத் தயாராக உரிய இடத்திற்கு வருவர். எந்த விதமான ஆட்டமாக இருந்தாலும் அது ஒரு விருத்தப்பாவுடனேயே ஆரம்பமாகும். விருத்தப்பாவை அண்ணாவியாரே ஆரம்பிப்பார்.

உதாரணமாக

விருத்தம்

ஆதி தன் அருளினாலே அஹமது நபியே
உங்கள் சுயமதில் உதவிதாரும் சேகப்பா
ஒலியுள்ளாவே...

தரு

தந்தனத் தான தனைதான தன
தான தந்தன தானானா

பாடல்

ஆதிபெரிய ரகுமானே இந்த
அம்பாரக் காட்சியைப் பாடுதற்கு
வெற்றி தருவாய் இறையோன இந்த
வேடிக்கை பார்க்க முடியாது

Tamilmanam

இவ்வாறே விருத்தம், தரு, பாடல் என்ற ஒழுங்கு முறையில் இக் களிகம்புப் பாடல் அமையும் மேலும் களிகம்பின் பாடல் முடிந்ததும் அண்ணாவியார் “தாளம் தாளம்” என குரல் கொடுப்பார். எனவேதான் களிகம்புப் பாடல்கள் சிறப்பாக அமைகின்றது.

**களிகம்பு நடனத்தில் ஆட்டமுறை**

நாட்டார் கலைகளுள் ஒன்றாகவும் முஸ்லிம்களின் பாரம்பரியங்களைக் கூறும் கலையாகவும் கவிகம்பு நடனம் விளங்குகின்றது. இக் களிகம்பு நடனமானது முஸ்லிம்களின் விடே தினங்களினை முள்ளீட்டு ஒரு மாத காலங்களுக்கு முன்னர். ஆரம்பிப்பர். அதாவது ஊர் மக்கள் ஒன்று கூடி கலந்துரையாடல் இடம்பெறும் அதில் அண்ணாவியார் தனக்குத் தெரிந்த அல்லது தனது குழுவில் உள்ளவர்களை அழைத்து களிகம்பாட்டம் ஆட வேண்டும் என்றும் அதற்கு தயாராக வேண்டும் என்றும் கூறுவார்.

ஆரம்ப காலங்களில் வயது போன 40,50 வயதிற்குட்பட்டவர்கள் தான் களிகம்பு ஆட்டத்தினை ஆடியிருக்கின்றார்கள். ஆனால் தற்காலத்தில் இளம் ஆண் பிள்ளைகளே இவ் ஆட்டத்தினை மேற்கொள்கின்றனர். இந் நடனம் விடே தினங்கள் வந்தால் அதற்கு முன்னரே ஆடத்தொடங்குவார்கள் ஆரம்பத்தில் அல்லா{ஹநினைத்து போற்றி சமாந்தரமான நிலத்திலே வட்ட வடிவமாக நின்று ஆடிப்பழகுவார்கள். இவ் ஆட்ட முறைகளை அண்ணாவியார் தனது விருப்பத்திற்கு இணங்க ஆட்ட முறைகளை பழக்குவார். இவ்வாறாக பழி ஆட்டத்தினை தெளிவு படுத்தியதன் பின் அரங்கேற்றம் வைப்பதற்கு அண்ணாவியார் தனது குழுவுடன் கலந்துரையாடி முடிவெடுப்பர் அதன் பீன் அரங்கேற்ற நிகழ்வுக்கான திகதியை எடுத்து அந் நாளில் அவ் ஊரில் உள்ள ஏனைய அண்ணாவிமார்கள் ஆட்ட நாயகர்கள் ஊர் மக்கள் அனைவரையும் வரவழைத்து தமது ஆட்டத்தினை தொடங்குவார்கள். இவ் வேளைகளில் பழைய களிகம்பு நிகழ்த்தியவர்கள் பயின்ற பிள்ளைகளுக்கு தமக்குத் தெரிந்த ஆட்டத்தினை அவ்விடத்திலே ஆடிக்காட்டுவார்கள். அதன் பின் பிள்ளைகளை ஆடச் சொல்லி அனுமதி அளிப்பர், (நேர்காணல், கலைமான் லெவ்வை தாஜுர், 48 வயது)

களிகம்பு ஆடும் பிள்ளைகளை ஆடப் பழக்கிய பின்னர் அன்றைய தினத்தில் அண்ணாவியார் அதைப் பார்த்துக் கொண்டிருப்பார். இறுதியில் அரங்கேற்றத்தில் 21 வகையான ஆட்ட வடிவங்களும் குறிந்த விடே தினத்தில் ஆடப்படும். இவ் ஆட்டம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சமாந்திரமான இரட்டை அணியாகவும் வேறு வடிவங்களிலும் ஆடப்பட்டாலும் களிகம்பு ஆடப்படுவதற்கு வட்டம் முக்கியமானதாகும். ஒன்றுக்குள் ஒன்றாக இரட்டை வட்டத்தில் எதிரும் புதிருமாக நின்று ஆடும் ஆட்டம் மிகவும் சிறப்பானது. இதில் எட்டு பேர் முதல் முப்பத்திரெண்டு பேர் வரை இணைந்து ஆட முடியும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. என்று பாடி முடிய தரு பாடப்படும்.

தந்தனத் தான தனைதான தன
தான தந்தன தானானா
தந்தனத் தான தனைநான தன
தான தந்தன தாண்னா

என்று முடிந்ததும் அண்ணாவியார் கம்பு கூட்ட மீண்டும் ஆடுவார்கள். அடுத்து வேகம் கூடிய ஆட்டம் ஆரம்பமாகும். பாடல் இடம்பெறும்.

மூவுலகெங்கும் புகழ்ந்திடும் - நபி
முஸ்தபா வின்றிடும் பாலகி
தாவுமணி மயிலாருக்கும் நல்ல
சங்கை யலிக்கும் களியாணங் காண்
(லரீப் சுலைமான், இறக்காமத்தூர் பண்பாட்டுப் பாடல்கள், பக்-34)

என்று பாடல் முடிந்ததும் மீண்டும் தரு அண்ணாவியாரால் பாடப்படும். இவ்வாறாக இவ் ஆட்டம் தொடர்ந்து பாதாள விந்தை, பள்ளி விழுது, கும்மியடி, சிற்றிழம்பிறை. மழவைத்து, நாலு வெட்டு, மங்கலம், ஓடைக்காரன், குயிலாசர், என பல வகையான ஆட்டங்களை ஆடுவார்கள். இவ் ஆட்டங்கள் ஆடி முடிந்த பின் அண்ணாவியார் இறுதியில் தாளம் தீர்க்கும் சொற்கட்டைச் சொல்லுவார்.

போகோ சிக்கச் சிமிதகு
தத்தகு தாகோடு தாதா
திகதிக தாதா தெய்

எனக் கூறி ஆட்டத்தினை முடிவு செய்வர். இவ்வாறாக புராண இதிகாச கதைகளையும் தன்னகத்தே கொண்டு களிகம்பாட்டமானது ஆற்றுகை செய்யப்படும். INTERNATIONAL COON MATu;EMAT

இவ் ஆட்டம் முஸ்லிம்களின் பெருநாட்களான நோன்புப் பெருநாள், ஹஜ்ஜ பெருநாள், தபி பிறந்த நாள், திருமண வைபவம், கள்ளத்துக் கல்யாணம்,ஆகிய காலங்களில் சந்தோசத்திற்காக ஆடுவர்கள் ஆனால் தற்போது விN~ட தினங்களில் போட்டி நிகழ்வாக இவ் ஆட்டம் இடம்பெறுகின்றது. ஓர் இடத்தில் களிகம்பு ஆடுவதற்கு ஏற்பாடு செய்தால் அப் பகுதி மக்கள் அண்ணாவியாருக்கு வட்டாவில் வெற்றிலை, பாக்கு வைத்து அழைப்பது வழக்கம். இதனை வட்ட வைத்தல் என்று கூறுவர். இதன் பின் அண்ணாவியாரையும் ஆட்டக்காரர்களையும் குறித்த நாளில் மேடைக்கு அழைத்து வருவர். களிகம்பு ஆட்டம் இடம்பெறும்

இக் களிகம்பு ஆட்டமானது தொடங்க முன் அண்ணாவியார் விருந்தம் கூறுவார். இவ்வாறு விருத்தம் பாடும் போது ஆட்டக்காரர்கள் கையில் கோல்களுடன் ஆட்டத்திற்கு தயாராகுவார்கள்.

தனதாம் தெய் என்றதும் பாடலைப் பாடத் தொடங்குவார்கள்.
தனதாம் தெய்"
அழகெல்லாம் ஒளிரும் சொர்க்கத்த்திபதி
இரசூலில்லாலும் வளமுறு மகளார்
பாத்திலாமணி மங்களத்தை.
பழகு செந்தமிழாம்.......
எனத் தொடங்கி
பஞ்சவர்ண செஞ்சுடராய்ப்
பதராய் நின்றே ஏ.
வெற்றிசிறி நபிமகளார்
ஆமீனா கற்ப புத்திரராய்
வருனைவார் பாதம் போற்றிப்
புகழும் மண மங்கலத்தை புகழுவேவே

(மரிப் சுலைமான் இறக்காமத்தூர் பணிபாடல்கள் 3

ஆட்டமாக அன்றியும் மக்களின் மனம் இவ்புறும் வகையில் வேகமாக ஆடுவார்கள் எனலாம்.

களிம்பாட்டம் மீனவர்கள், விவசாயிகள், வியாபாரிகள் என அனைவராலும் சேர்ந்து ஆடப்பட்டு வந்திருக்கின்றது. இது இந்த இந்த தொழிலுக்குரியவர்கள் ஆட வேண்டும் எனும் வழக்கம் இல்லை, இவ் ஆட்டத்தினை ஆட விரும்புபவர்கள் தமது ஓய்வு நேரங்களை இவ் ஆடல்கள் மூலம் கழிப்பார்கள். இந்த ஆடல் வகைகளைப் பற்றி எல்லோரும் அறிந்திருப்பினும் இவர்களுக்கு குருவாக அண்ணாவியார் காணப்படுவார். இவர்களின் ஆடற் பிசகாத வகையில் இவர் ஆட்டத்திற்கு ஏற்ப தாள இசைக்குத் தக்கதாக பாடல்களைப் பாடுவர். சில வேளைகளில் அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களை வடிவமைத்து பாடக்கூடியவராகவும் காணப்படுவார்கணம் என்று கூறியுள்ளார்கள்.

எனவே இக் களிகம்பாட்டமானது ஆரம்ப காலத்தில் வேட்டையாடும் சமூகத்தினரால் அபிநயிக்கப்பட்டு பின் வந்த சமூகத்தினர் இதனுள் பல ஆட்ட வகைகளைச் சேர்த்து களிகம்பு ஆட்டமாக ஆடி வந்துள்ளளர். இவ்வாறே இக் களிகம்பாட்டம் எந்த தெய்வத்திற்கோ எந்த இனத்தையோ பிரதிபலிப்பதாக அமைய வில்லை. தினம் தினம் பாடுபட்டு உழைக்கும் உழைப்பாளிகள் தமது ஓய்வு நேரங்களை ஆடல், பாடல் மூலம் கழித்துள்ளனர் எனலாம்.

**இசைக்கருவிகள்**

எந்த வகையான ஆடலாக இருந்தாலும் இசைக்கருவிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். அந்தவகையில் பொல்லடி நடனத்திற்கு பாடல் பாடுகின்றவரின் தொண்டையிலிருந்து வரும் ஓசையும் மத்தளத்தின் சந்தமும் சல்லாரியின் ஓசையுமே மேலோங்கி காணப்படும். எனவேதான் பொல்லடிக்கு உறுதுணையாக அமையும் இசைக்கருவிகளாக மத்தளமும் சல்லாரியும் விளங்குகின்றது.

களிகம்பு ஆட்டத்திற்கு இசைக்கருவியாக றபான் பயன்படுத்தும் பயன்படுத்தப்படுகின்றது. இதனுடன் அண்ணாவியாரினதும் பக்கப்பாட்டுக்காரர்களினதும் தொண்டையிலிருந்து வரும் ஒலியும் றபானும் தான் இசைக்கருவி வகைக்குள் அடக்கலாம். எனவே இவ்விரு ஆட்ட வகைகளுக்கும் இசைக்கருவிகளின் முக்கியத்துவம் காணப்படுகின்றது. ஆகவே இசைக்கருவிகளைப் பொறுத்த வரையில் இவ்விரு கலைகளுக்கு இடையில் ஒற்றுமையே காணப்படுகின்றது.

**முடிவுரை**

முஸ்லிம் சமூகத்தின் களிகம்பு நடனம் ஆன்மிக உணர்வை வெளிப்படுத்தும் கலை வடிவமாகவும், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் கலாச்சாரச் சின்னமாகவும் விளங்குகிறது. இதனைப் பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், பாரம்பரிய மக்கள் கலைகளின் வாழ்வியல் நீடிக்கும் மற்றும் அடுத்த தலைமுறைக்கும் அதன் சிறப்பை பரப்ப முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அனஸ்.எம்.எஸ்.எம். (2007),இலங்கையில் முஸ்லிம் நுண்கலை: ஒரு விமர்சன ஆய்வு, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்,
2. அஜ்மல்கான், பீ.மு. உவைஸ்.ம.மு.. (1997), இஸ்லாமியத் தமிழ் இலக்கியவரலாறு தொகுதி நான்கு, மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
3. ~ரீப் றம்சீன்,எம்., (1999), இஸ்லாமியக் கலைகள், வவுனியா: மதார் உம்மா வெளியீடு
4. ~hகுல் ஹமீது, எம்.ஏ. (பதிப்.), (1988), மஜ்முஅ முனாஜாத், சென்னை: ஹாஜி எம்.ஏ.~hகுல் ஹமீது அன்டு ஸன்ஸ்.
5. ஜெமீல்.எஸ்.எச்.எம்.(பதிப்.), (1997), அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்,கொழும்பு: கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமயகலாசார அலுவல்கள்திணைக்களம்.
6. றசூல்,ஹெச்.ஜி. (2016,தரநெ.02). 'பக்கீர~hக்கள் எனும் கதை malaigal.Com//p-8338.
7. Macdonald Millton Cowan,j.(Ed.). (1980). A dictionary of Modern Written Arabic and Evans Ltd.